தொண்டன் வெளியீடு–51

இறைநிலை அல்லது கடவுள்

திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான்
திருநெறித் தொண்டர் குழாம் தலைவர்

திரு. ஆறுமுக நாவலர் அவர்களது

"இறைநிலை அல்லது கடவுள்" எனும்
...பொழிவின் சாரம்.

தொண்டன் காரியாலயம்

அம்பலவாணர் நிலையம்

கிருஷ்ணன்கோவில் : : நாகர்கோவில்

[பதிப்புரிமை ஆசிரியருக்கே] பிரதி ஒன்று ரூ. 0–2–0

1–8–1958 பிரதிகள் பத்து ரூ. 1–0–0

முகவுரை

பேரன்பு மிக்க பெரியீர்!

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

நமது உயரிய சமயத்தின் அரிய பெரிய கருத்துக்கள் சாத்திர ஆராய்ச்சியால் உய்த்துணரத்தக்கன. சாத்திர ஆராய்ச்சி கற்று வல்ல பெருமக்களுக்கே யன்றி ஏனையோருக்கு எளிதில் இயலாததாகும்.

ஆதலால் நமது சமயத்துக்கு எதிரிடையான கொள்கைகளும் இயக்கங்களும் தோன்றலாயின. நமது சமயத்தைப் பற்பல வகையில் பகிரங்கமாகப் பழித்துப் பேசவும் எழுதவும் பலர் தலைப்பட்டுள்ளனர். இதனால் நமது சமய வளர்ச்சி குன்றவும் பிற சமயங்கள் வளரவும் காரணமாயிற்று.

இந்நிலையை யகற்றி சமயம் தழைத்தோங்க முப்பது வருடங்களாக அடியேன் பற்பல இடங்களில் சொற்பணி யாற்றி வருவது தமிழுலகு நன்கறிந்ததேயாகும். இச்சொற்பொழிவுகளைக் கேட்ட பலர் பலவகையில் பயன் பெற்றுள்ளனர். சுமார் ஐம்பதினாயிரத்துக்கு மேல் பிறமதம் புகுந்தவரை நமது மதத்துக்குத் திருப்ப இச்சொற்பொழிவுகள் பயன்பட்டுள்ளன. இச்சொற்பொழிவுகள் ஒவ்வொன்றையும் நூல் வடிவமாக்கி தமிழுலகுக்கு உதவ வேண்டுமென பல அறிஞர்கள் வேண்டினர். அவர்கள் வேண்டுதலாலும் நமது சமயத்தின் நலம் கருதியும் இறை நிலை அல்லது கடவுள் எனும் இச்சிறு நூலை வெளியிடலானேன்.

எல்லோரும் சமய நுட்பங்களை எளிதில் உணரும் ஏக நோக்கத்துடன் இதனை ஒரு சிறு அடக்க விலைக்கு அளிக்க முன் வந்துள்ளேன். இதனை எல்லோரும் வாங்கிப் படித்து இறையருள் பெறுவார்களாக.

இதனைப் பொருள்படைத்த புண்ணியர்கள் மிகுதியாக வாங்கி மாணவர்கட்கும் ஏழைகட்கும் இலவசமாக அளித்து புண்ணியம் பெறுவார்களாக. இக்காலத்துக்கேற்ற தர்மம் இதுவே.

"கடவுள் என்ற சக்தியைக்
கருதிடாத பித்தரின்
மடமை நீக்கும் சேவைதான்
மனிதர்க்கின்று தேவையாம்"

—நாமக்கல் கவிஞர்

1-8-1958
நாகர்கோவில்

திருவாவடுதுறை ஆதீன
மகாவித்வான்
ஆறுமுக நாவலர்

உ

சிவமயம்

இறை நிலை அல்லது கடவுள்

1. கடவுள் உண்மை

இக்காலத்தில் சிலர் கடவுள் ஒருவர் உண்டேன்றும், சிலர் இல்லை யேன்றும் பேசுகிறார்கள். கடவுள் உண்டு என்பவரை ஆஸ்திகர் எனவும், கடவுள் இல்லை என்பவரை நாஸ்திகர் எனவும் கூறுவர். நமது சமயம் கடவுளை உண்டேன்றோ இல்லையேன்றோ கூறாது கடவுள் ஒருவர் வேண்டும் எனக் கூறுகிறது. கடவுள் ஒருவர் வேண்டுமா? வேண்டாமா? என அறிவால் காண்பவனே அறிஞன் எனப்படுவான்.

ஒரு ஊரில் ஒரு பையன் இருந்தான். அவன் தந்தை அவன் கர்ப்பத்தில் இருக்கும் போதே இறந்து போனார். தாய் அவனைப்பெற்ற எட்டாம் நாள் இறந்தாள். ஆதலால் அப்பையனுக்கு தாயையும் தெரியாது தந்தையையும் தெரியாது போயிற்று. அவன் அதனால் "எனக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை" என்று கூறிக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் வீட்டிலுள்ள பசு ஒன்று கன்று ஈன்றது. அதனை உற்று நோக்கினான். 'கன்று ஒன்றுபிறக்க தாய்ப்பசு ஒன்றுவேண்டும்' என உணர்ந்தான்.

இதுபோல இவ்வுலகிலுள்ள ஆண் பெண் முதலிய மக்களும், மிருகங்கள், பறவைகள் முதலிய உயிர்ப்பிராணிகளும், மரஞ் செடி கோடி மு த லி ய தாவரங்களும் தோன்றி வாழ்ந்து இறக்கின்றன. இத்தொழில் ஆதி காலந்தொட்டே என்றும் நடைபெற்று வருகின்றதால் இதனை இனிது நடத்த ஆற்றல் வாய்ந்த ஒரு சக்தி அல்லது தலைவன் அவசியம் இருந்தே தீரவேண்டுமென அறியலாம்.

அதனாலேயே கடவுள் ஒருவர் உண்டென்றோ இல்லையென்றோ நமது மதம் கூறாமல் கடவுள் ஒருவர் வேண்டும் எனக் கூறுவதாயிற்று,

2. கடவுள் ஒருவர் உளர்

கண்ணால் காணமுடியாத கடவுளை உண்டென்று எப்படி நம்புவது? எனச் சி ல ர் கேட்கின்றனர். ஒரு பொருள் உண்டு என அறிவதற்கு மூன்று வழிகள் உள்ளன. ஒன்று அதனை நேரில் க ண் ணா ல் காண்பது. இரண்டு அதைப்பற்றிக் கூறும் நூல்களைப்படித்து உணர்வது. மூன்று அதன் செயல்களைக்கண்டு அது உண்டென அனுமானிப்பது.

கடவுளை நேரில் காண எல்லோருக்கும் முடியாது. மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள் போன்ற மகான்கள் அவரை நேரில் கண்டிருக்கிறார்கள். தக்க பக்குவம் வாய்ந்தவர்களுக்கு கடவுள் காட்சியளிப்பார். பக்குவம் வராதவர்கள் அவரைப்பற்றிக் கூறும்

நூல்களைப்படித்து அதிலிருந்து அவர் உண்டென அறிந்து கொள்வர். நூல்களைப் படித்து அறிய முடியாத வர்கள் கடவுளின் அரிய செயல்களைக் கொண்டு அவர் உண்டென உணர்வர். காற்று மின்சாரம் உயிர் இவற்றை நம்முடைய கண்களால் காண முடிகிறதா? முடியவில்லை யாதலால் அவைகள் இல்லை யெனக் கூறலாமா? அவை களின் வேலைகளைக்கண்டு அவை உண்டென்று அனுமா னிப்பதுபோல, கடவுளின் ஆக்கல் - அளித்தல் - அழித் தல்–மறைத்தல் - அருளல் முதலிய செயல்களைக் கொண்டு நாமும் அவர் உண்டென அறியலாம்.

விறகில் தீ இருப்பதும், பாலில் நெய் இருப்பதும், மணியில் ஒளி இருப்பதும் நமது கண்ணுக்குத் தெரிய வில்லை. விறகை முறுக வாங்கிக் கடைந்து தீயையும், பாலைத் தயிராக்கிக் கடைந்து நெய்யையும், மணியைப் பட்டைதீட்டி ஒளியையும் காண்பதுபோல கடவுளைப் பக்தியாலும் ஞானத்தாலும் காணலாம்.

உலகப் பொருள்களைக் காண்பதுபோல பார்த்த பார்வையில் காணமுடியாததால் கடவுள் இல்லை யென்று சொல்லிவிடாமல் அவரைக் காண்பதற்குச் சாத் திரங்கள் கூறும் முறையைக் கையாண்டு முயன்று கட வுளைக்கண்டு களிப்போமாக.

3. கடவுள் இலக்கணம்

நமது மதத்தில் கடவுளது இலக்கணத்தைப் பல வேறு விதமாகப் பற்பலர் கூறுகின்றனர். கடவுள் என்ற

சொல்லுக்கு எவற்றின் உள்ளும் கடந்து நிற்பவர், எவற்றையும் உள் நின்று கடவுகின்றவர் அல்லது செலுத்துகின்றவர், எல்லாவற்றையும் கடந்தவர் எனப் பொருள் கூறுவர். கடவுளைப் பிரம்மம் என்றும், உயிர்கள் அதன் அம்சங்கள் என்றும், காணப்படும் உலகம் கானல் ஜலம் போலவும் கயிற்றுப் பாம்புபோலவும் பொய்யானதென்றும் ஆகவே, பிரம்மம் ஒன்றே உள்பொருள் மற்றவை ஒன்றுமில்லையென ஒரு சிலர் கூறுவர். வேறு சிலர், கடவுளும் உண்டு கடவுளும் உயிர்களும் பாசங்களும் உள்பொருள்கள் என்றும், அவை பதி – பசு – பாசம் அல்லது இறை - உயிர் - தளையென அழைக்கப்படும் என்றும் கூறுவர். இதன் உண்மையை ஆராய்வோம்.

கடவுளுக்கு அகளநிலை - சகளநிலை என இருவகை நிலைகள் உள்ளன. அவர் அகள நிலையில் இருக்கும் போது உருவம் - நிறம் – குணம் - குறி முதலியன எதுவுமின்றி இருக்கிறார். அந்நிலையில் அவரை நம்மால் உணர முடியாது. அவர் தானே இரங்கி சகள நிலையை அடைகின்றார். அப்போது அவருக்கு உருவம், நிறம், குணம், குறி முதலியவை யனைத்தும் உண்டாகி விடுகின்றன. அந்நிலையில் அவரை உணர நமக்கு இயலும். நீராவி அரூபமாய் இருக்கின்றது. அப்போது அதை உணரவோ நுகரவோ நமக்கு முடியாது. நீராவி மழையானால் அதை அறிந்து நுகருகிறோம். அதுபோல, கடவுள் அகளமாய் இருக்கும்போது அவரை நமக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியாது. அவரே இரங்கி சகள வடிவு கொண்டால் நமக்கு அவரை அனுபவித்து ஆனந்திக்கலாம். இதனாலேயே கடவுள்,

''அவையே ஆய் தானே ஆய்
அவையே தானே ஆய்''

அல்லது

''ஒன்ருய் – வேருய் – உடனுய்''

இருக்கிருன் எனச் சாத்திரங்கள் சாற்றுகின்றன.

அவர் எல்லா உலகங்களிலும், எல்லா உயிர்களிடத்தும் நிறைந்து உடலுக்கு உயிர்போல விளங்குவார். அந்நிலையில் அவரை உணர்ந்து கொள்ள யாருக்கும் முடியாது. அந்நிலைதான் **''அவையே ஆய்''** நிற்கும் நிலை.

பின் அவ்விறைவன் **''தானே ஆய்''** நிற்கிருன். அப்போது அவரை நாம், கண்கள் கதிரவனிடமிருந்து ஒளி பெறுவது போல அருள் பெறுகிருேம்.

கடவுளுக்கு மற்ருெரு இலக்கணமும் உண்டு. அது **''உடன் ஆய்''** நிற்கும் நிலை. அது கண்ணுெளியும் உள்ளுணர்வும் போன்றதாகும்.

இவ்வாறு இறைவன் உயிர்களோடு கலந்தும், உயிர்களினின்று வேருகி அருளியும் நமக்கு உதவுகின்ருன்.

4. கடவுளின் திருவுருவம்

கடவுளுக்கு அருவம் - அருவுருவம் - உருவம் என மூன்று நிலை உண்டு. அவர் அருவமாயிருக்கும்போது

அவரைச் சிவம்-சக்தி-நாதம்-விந்து எனப் படுவர். அருவுருவமாயிருக்கும் போது சதாசிவம் என்பர். உருவ நிலையடையும்போது, மகேஸ்வரன் – உருத்திரன் - மால் - அயன் எனப் பெயர் பெறுவர்.

அருவமாய் இருந்த அவர் அப்படியே இராமல், உருவமாய் ஏன் வந்தார்? எனச் சிலர் கேட்கலாம். ஆகாயத்திலுள்ள நீராவி மேகமாகி மழையாகின்றது. அது நீராவியாகவே இருந்துவிட்டால் அதை நமக்கு அனுபவிக்க முடியாது. அதுபோல கடவுள் அருவமாகவே இருந்து போனுல் அவரையும் நமக்கு அனுபவிக்க முடியாது. அதற்காகவே அவர் நம்மீதுள்ள கருணையால் உருவங் கோள்கிருர்.

ஒரு உருவம் போதாதா? பல உருவங்கள் எதற்கு? எனச் சிலர் கேட்கலாம், நம்முடைய தந்தை பல தொழில்களைச் செய்யும் போது பல உருவத்தில் நாம் படம் பிடித்துப் பார்ப்பதுபோல, கடவுள் ஆக்கல்-அளித்தல்–அழித்தல்–மறைத்தல் - அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்யும்போதும், உலகத்தை அழிக்கும் போதும், அருளும் போதும் பற்பல திருவுருவங்களை எடுக்கின்ருர். அருவத்தில் அவரை வழிபடுவதைவிட உருவத்தில் வழிபடுவது மிகவும் நல்லது. கடவுள் திருவுருவ விளக்கத்தை அடியிற் காண்க.

கடவுள்

அருபம்

1. சிவம்
2. சக்தி
3. நாதம்
4. விந்து

ரூபாரூபம்

5. சதாசிவம்

ரூபம்

6. மகேசன்
7. ருத்திரன்
8. மால்
9. அயன்

5. சக்தி

இறைவனது அருளே சக்தியாகும்.

"அருளது சக்தியாகும்"

என்பது சிவஞான சித்தியார் வாக்கு. சக்தியும் சிவமும் ஒன்றே. தீயும் சூடும் ஒன்ருயிருப்பது போலவும், சூரிய னும் ஒளியும் பிரியாதிருப்பதுபோலவும் இறைவனும் இறைவியும் ஒன்ருய்ப் பிரியாதிருந்து உலகிற்கு அருள் புரிகின்ருர்கள். இறைவனிடத்திலிருந்து அம்மை தோன் றினள் எனின், இறைவன் தந்தையாகிருன். இறைவியி னிடமிருந்து இறைவன் தோன்றினுரேனின் இறைவி அம்மையாகிருள். இருவரும் சேர்ந்து உலகத்துயிர் களுக்கு உடல் முதலியவற்றைக் கொடுக்கின்ருர்கள் எனில், இறைவனும் இறைவியும் அம்மையப்பரா கின்றனர்.

இவ்வாறேலாம் இருப்பினும் அவ்விறைவனும் இறைவியும் கன்னியும் பிரம்மச்சாரியும் போலவே இருக்கின்ருர்களெனச் சாத்திரம் கூறுகின்றது. தாய் தந்தையர்களில், தந்தையைவிடத் தாய் பிள்ளைகளிடம் இரக்கமுள்ளவளாய் இருப்பதுபோல, இறைவனைவிட இறைவி உயிர்களிடம் கருணையுள்ளவளாய் இருக்கிருள். குழந்தையின் நோயை நீக்க தாய் மருந்து அருந்துவதுபோல, அவள் உயிர்களுக்காகத் தவம் செய்து வரம் பெறுகிருள். நட்டுவன் நாட்டியப் பெண்ணை நடனமாடக் கற்பிக்கும்போது தானும் நடனம் புரிகின்ருன், அவன் ஆடாமல் போனுல் பெண்ணும் நன்ருய் அறிந்து ஆடாது. பெண் ஆடுவதற்காக தான் ஆடும் நட்டுவன்போல, உலகிலுள்ள நாமெல்லாம் ஆணும் பெண்ணுமாய் வாழ இறைவன் அம்மையப்பராய் விளங்குகிருன்.

இறைவன் அருவத்தில் சிவமாய் இருக்கும்போது சக்தியாகவும், நாதமாய் இருக்கும்போது விந்துவாகவும், அவள் நடிக்கிருள். அவன் அருவுருத்தில் சதாசிவம் அல்லது சிவலிங்கவடிவம் கொள்ளும்போது அவளும் அருவுருவத்தில் மனேன்மணியாகின்ருள். உருவத்தில் மகேஸ்வரனுக்கு மகேஸ்வரியாகவும், உருத்திரனுக்கு உமாதேவியாகவும், திருமாலுக்கு திரு அல்லது இலக்குமியாகவும், பிரமனுக்கு வாணியாகவும் அவள் விளங்குகிருள். இதனை அடியில் வரும் பட்டியல் விளக்கும்.

சக்தி

அருபம்		ரூபா ரூபம்	உருவம்			
சிவம் சக்தி	நாதம் பிந்து	சதாசிவம் மனோன்மணி	மகேஸ்வரன் மகேஸ்வரி	உருத்திரன் உமை	மால் திரு	அயன் வாணி

6. தக்ஷிணாமூர்த்தி

இறைவன் அம்மையப்பராய் விளங்குவதோடு குரு வடிவம் தாங்கி தக்ஷிணாமூர்த்தியாகவும் அருள் புரிகின்றான். அப்போது சின்முத்திரையால் சனகாதிகளுக்கு உபதேசிக்கின்றான். நமது கையிலுள்ள பெருவிரலைப் போன்று கடவுளும் சுட்டு விரலைப் போன்று உயிர்களும், மற்று மூன்று விரல்களைப் போன்று ஆணவம், கன்மம், மாயை யென்ற பாசங்களும் உள்ளன எனவும், பாசங்களைவிட்டு உயிர் இறைவன் திருவடியை அடைவதே முத்தியெனவும் விளக்கி பதி – பசு - பாசங்களின் தன்மையை அருளிச் செய்கின்றான்.

7. நடராசர்

இறைவன் போகியாகவும் குருவாகவும் நமக்கு அருளுவதோடு, உலகத்தை ஆக்கி அளித்து அழித்து மறைத்து அருளுகின்ற ஐந்தொழிலையும் விளக்கும் திரு நடனத்தையும் புரிகின்றான். ஆக்கத்தை அல்லது படைப்பைத் தன் கையிலுள்ள உடுக்கையாலும், அளித்தல் அல்லது காப்பாற்றுதலை அபயக் கையாலும், உல

கங்களை இறுதியில் அழிக்குந் தொழிலை இடது கையிலுள்ள தீயாலும், உயிர்களை அவை செய்த நன்மை தீமைகளுக்குத் தக்க இன்ப துன்பங்களை நுகரச் செய்வதை ஊன்றிய வலக்காலாலும், உயிர்களுக்கு முத்தியருளுவதை தூக்கிய காலாலும் விளக்கி திருநடனம் புரிகின்ருன்.

8. வேகவடிவம்

போக வடிவத்தோடும், குரு வடிவத்தோடும், நடன வடிவத்தோடும் விளங்கும் இறைவன் சிலவேளைகளில் பயம் தரத்தக்க வேகவடிவத்தில் காட்சியளிக்கிருன். அது நமது வினையை இல்லாமல் செய்வதற்கே யாகும். உயிர்கள் தீவினையால் தீயவினைகளைச் செய்து பாபத்துக்கு ஆளாகும்போது இறைவன் அதனை அகற்ற 'வேகி'யாகிருன். ஒரு நோயாளியின் வியாதியை வைத்தியன் கருவியால் அறுத்துக் காந்தல் மருந்துகளை வைத்துக் கட்டி நோயாளிக்கு எல்லையற்ற துன்பத்தைக் கொடுத்தாலும் அது நோயாளியின் மீது வைத்தியர் கொண்ட கருணையை விளக்குவது போல, ஆண்டவன் நம்மைப் பற்றிய பாவங்களை அகற்றுவதற்காகச் சில வேளையில் துன்பங்களையும் தருவான். அது நம்மீது வைத்த கருணையே யாகும். இவ்வுண்மையை,


"போகியாய் இருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
யோகியாய் யோக முத்தி உதவுதல் அதுவு மோரார்
வேகியா ஞற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பரின் ஒருவ னென்பர்"

எனும் சிவஞான சித்தியார் பாட்டால் அறியலாம்.

தொகுப்புரை

மேற் கூறியவாற்ருல் உலகிற்குக் கட்வுள் ஒருவர் வேண்டுமெனவும், அக்கடவுள் ஒருவரேயெனவும், கடவுள் பலவகையில் நமக்கு அருளுகின்ருர் எனவும், பலவகை உருவங்கள் ஒரே இறைவனின் திருவுருவங் களேயாமெனவும், கடவுள் பல வடிவங்களில் காட்சி யளிப்பினும் ஏக நாயகனே யாவன் எனவும் இனிது விளங்கிற்று.

இத்தகைய பெருமை வாய்ந்த கடவுளைப் பற்றி நாம் மேலும் ஞான நூற்களால் நன்கறிந்து அவனை வழி பட்டு அவனது அருள் பெற்று உய்வடைவோமாக!



எம். எஸ். எம். பிரஸ், நாகர்கோவில்.